விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 024 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 28 புதன்கிழமை (12.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## மாதகலில் படகு விபத்து மீனவர் ஒருவர் உயிரிழப்பு

### கடற்படை படகு மோதியது என குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மாதகல் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் சென்ற படகு சேதமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மாதகல் குசுமாந்துறையைச் சேர்ந்த திலீபன் என அழைக்கப்படும் எட்வெர்ட் மரியசீலன் (வயது-31) என்ற மீனவரே உயிரிழந்துள்ளார். குறித்த மீனவர் 15

## இந்திய பிரதமருக்கான ஆவணம் தயார்

### 18 ஆம் திகதி இந்திய தூதுவரிடம் கையளிப்பதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

இந்திய பிரதமரிடம் கையளிப்பதற்காக ஒப்படைக்கப்படவிருந்த தமிழ்க் கட்சிகளின் ஆவணம் எதிர்வரும் 18ஆம் திகதியே இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்படும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இன்று (நேற்று) 15

2022
வலம்புரியின்
தெய்வீக வர்ண
கலண்டர் நாளை
விற்பனை முகவரிடம்
தவறாது கேட்டு வாங்கவும்.

## மக்களின் எதிர்ப்பு எந்தவகையில் வெடிக்கும் என்பதனை கணிக்க முடியாது

### ஐ.தே.க. உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம்



(கொழும்பு) மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினைக்கு அரசாங்கம் விரைவில் தீர்வுகாண வேண்டும். இல்லாவிட்டால் மக்களின் எதிர்ப்பு எந்தவகையில் வெடிக்கும் என எதிர்பார்க்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## பால் புரைக்கேறியதில் யாழில் பெண் சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

பால் புரைக்கேறியதில் யாழ். சித்தன்கேணியைச் சேர்ந்த 52 நாட்களேயான பெண் சிசு ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. 15

முன்கூட்டியே தயார்படுத்துங்கள்

## எதிர்வரும் 10 நாட்களுக்கு மின்தடை ஏற்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 10 நாட்களில் இடைக்கிடையே மின்வெட்டு ஏற்படக்கூடும் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற 15

எதிர்வரும் 18ஆம் திகதி

## ஜனாதிபதி கோட்டா சிம்மாசன உரை

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எதிர்வரும் 18 ஆம் திகதி தனது சிம்மாசன உரையை 15

## கைதடியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதி 15

## யாழில் 10 தேர்தல் தொகுதிகளில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும்

### காங்கேசன்துறையில் சஜித் உறுதி

(யாழ்ப்பாணம்)

எமது ஆட்சியில் யாழில் உள்ள பத்துத் தேர்தல் தொகுதிகளிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வலி.வடக்கு மாவை கலட்டி கொல்லங்கலட்டிப் பகுதியில் இடம்பெற்ற மக்களு 15

அரச தலைவரின் கோரிக்கையால்

## இலங்கைக்கு பாரிய ஆபத்து

### சம்பிக்க எச்சரிக்கை



(கொழும்பு)

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் கோரிக்கை காரணமாக இலங்கையை மீண்டும் சர்வதேச கடன் தரப்படுத்தலில் கீழ்நோக்கி கொண்டு செல்லக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு செலுத்த வேண்டிய கடனை செலுத்த மேலதிக காலத்தை வழங்குமாறு, தன்னை சந்தித்த சீன வெளிவிவகார அமைச்சரிடம் 15


தைப்பொங்கலை முன்னிட்டு வர்த்தக சந்தை யாழில் ஆரம்பம்

## கொரோனா 15 பேர் பலி

(கொழும்பு)

கொரோனா தொற்றால் நாட்டில் மேலும் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவசம்பு சிவசுப்பிரமணியம்



பிறப்பு : 22.01.1945 இறப்பு : 09.01.2022

மட்டுவில் வடக்கு, சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் கடந்த 09.01.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிராம சேவையாளர் அருணாசலம் சின்னத்தம்பி - தெய்வானைப் பிள்ளை (மரகதம்) தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நாகராஜாவின் அன்பு அண்ணனும் சிவசந்திரிக்கா, சிவசந்திரன், சிவதர்சினி, சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமைந்தன், மோகன்ராஜ் (கண்ணன்), ராஜிக்கா, சோபா ஆகியோரின் அன்பு மாமனாரும் நவீன், பிரஜான், நிவேஷ், நெல்சன், ஏவா, தீபக் , திவ்யா, புகழினி ஆகியோரின் அன்புப் பேரனும் அகிலன், ராஜகிரி, ஐங்கரன் , சிறீரங்கன், கலைச்செல்வன், வினோத், பிருந்தா, சங்கவி, கபிலன், பிரணவன், மாயவன், சகானா, கீர்த்தனா, சந்தனா, வர்ணா, வர்ணன், சுருதி, சங்கீதன், வித்தகன், அட்சயன், அட்சயா, அபிநா, அபிதேவ், ஆரபி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் செல்லக்குட்டி (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற தம்பு மற்றும் பறுபதம், சேதுப்பிள்ளை, ஆகியோரின் பெறாமகனும் செல்லம்மாவின் மருமகனும் மனோகரன், கங்காதரன், பரமேஸ்வரன், விமலாதேவி, சிவானந்தன், கேதீஸ்வரன், இராமச்சந்திரன், அருள், சத்தியமூர்த்தி, கிருபாகரன், சிவநங்கை, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நடராஜா, தியாகராஜா, இந்திரராஜா, செல்வராஜா, பரஞ்சோதிராசா, சின்னராசா, செல்வகணேஸ், செல்வவரதன், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு உடன்பிறவா அண்ணனும் காப்த்திகன், வினோஜா, சர்மிலன், ரஜிகரன், நவிலன், வாகீசன், சாதனா, சுபீட்சனா, சபீட்சன், சாயிசனா, நந்தனா, யசிக்கா, ரூபனா, ஆருத்திரா, திருவாசகி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.01.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மட்டுவில் வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி : 076 570 3511
மகள் : 0094 70 170 6205
0094 21 227 1838

(C-3405)

தகவல் :-
குடும்பத்தினர்

# தவறிவிட்டது

துர்க்காயினி இராசகுலேந்திரன் என்பவரது பட்டச் சான்றிதழ்கள், சாரதி அனுமதிப் பத்திரம், அடையாள அட்டை என்பன 7.1.2022 வெள்ளிக்கிழமை இரவு பதுளையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த DILMI EXPRESS(UPND- 5304) எனும் பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழுள்ள எண்ணுடன் தொடர்பு கொண்டு தந்து உதவவும்.

(C-3511)

077 711 2181 | 077 929 5806

### வாடகை அடிப்படையில் வாகனம் பெறுவதற்கான

# கேள்வி அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அலுவலகப் பயன்பாட்டிற்கு 01.01.2015 இற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வான் ரக வாகனம் ஒன்றினை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன,

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ (021 225 6650) பெற்றுக்கொள்ள முடியும். மேலும் 12.01.2022ஆம் திகதி தொடக்கம் 25.01.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை நிதிக் கிளையில் ரூபாய் 1000.00 (மீளப்பெறாத தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 27.01.2022 ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் த்பாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விதாரர் அல்லது வருகைதரும் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**யாழ் வீதி, மானிப்பாய்.**
**12.01.2022**

(C-3510)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2021 ஆம் ஆண்டிற்கான இலஞ்ச மற்றும் ஊழல் அற்ற சிறந்த அரச சேவையாளனாக **"நேர்மைக்கு மகுடம்"** எனும் விருதினைப் பெறும் எமது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் உயர்திரு **சண்முகராசா சிவஸ்ரீ** அவர்களை மனமார வாழ்த்துகிறோம்.





**தலைநகரில் நம் தலைமகனுக்கோர் தனிப் பெரு மகுடம்**
**கலை மலி வலி. வடக்கின் களமெல்லாம் வெற்றிப் பெருமிதம்**
**தேவையறிந்தே நாளும் சேவைபுரிந்தே வாகை சூடிடும் வளர்பிறை**
**கோவை அறநெறி தவறிடா நேர்மை வழிசெல் நம் நாயகன்**
**கலியுக காலமதில் கண்ணியமது தேடிடக் கிடைக்கா பெருஞ்செல்வம்**
**கொட்டிக் கிடக்குது நின் பாதையெங்கும் நல் நேர்மையின் பொக்கிஷங்கள்**
**தடைகளைத் தவிர்த்து திறன்களை விதைக்கும் தளர்விலா நெறியாளன்**
**நேர்மையின் மகுடமே சேவையின் சிகரமே வாழிய புகழுடன் வாழியவே!**

Best wishes

வாழ்த்துவோர் : ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், தெல்லிப்பளை

(9620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசிக்குள் மூழ்கியதால் கல்வியில் பின்னடைவு



## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் கவலை

(குப்பிழான்)

**மாணவர்கள் கைத்தொலைபேசிகளுக்குள் மூழ்கிக் கிடப்பதால் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலை காணப்படுவதாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் கவலை வெளியிட்டார். கடந்த சனிக்கிழமை யாழ். வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையில் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மாணவர்கள் தற்போது கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் பல மாணவர்கள் கைத் தொலை பேசிகளுக்கு அடிமையாகி விட்டனர். அண்மையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள பாடசாலையில் மாணவர்கள் மத்தியில் கண் பரிசோதனை மேற்கொண்ட போது பல மாணவர்கள் கண் தொடர்பான குறைபாடுகளுடன் இருப்பது கண்டறியப்பட்டது. கைத்தொலைபேசிகளில் மாணவர்கள் கூடுதல் நேரம் செலவிடுவதே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்தார்.

கொரோனாப் பெருந் தொற்றுக் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டன. இதன்காரணமாக நாடு முழுவதும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இதற்கு தீர்வாக இணைய வழித் தொழில்நுட்பத்துடனான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இடையில் நடைபெற்ற ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களால் இணைய வழிக் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. எதிர்வரும் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றப் போகும் மாணவர்கள் பெரும்பாலும் சரியான கல்வியை முழுமையாகப் பெறாத நிலையில் உள்ளனர்.

ஏனெனில், அவர்களுக்கு வகுப்பறைகளில் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. இந்த நிலையில் மாணவர்களின் கல்வியை முழுமையாகப் பூர்த்தி செய்து மாணவர்கள் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும்' அவர் தெரிவித்தார். (4-5-18)

# உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலங்கள் நீடிப்பு

(கொழும்பு)

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் பதவிக் காலங்கள் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளன. இதற்குரிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினை அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய நாட்டின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினதும் பதவிக் காலங்கள் 2023 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளன. 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளின் பதவிக் காலங்களே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளன. (நி-5)

# கொரோனாவைக் காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று எனக் கூறி தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன இந்த வேண்டுகோளை விடுத்தார்.

69 இலட்சம் மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்ததாக தெரிவிக்கும் அரசாங்கம் தேர்தலை நடத்த அஞ்சத் தேவையில்லை என்றும் மக்கள் யாருக்கு ஆதரவை வழங்குகின்றார்கள் என்பதை அறிந்துகொள்ளவாவது தேர்தலை நடத்துங்கள் எனவும் அவர் சவால் விடுத்தார். (நி-5)

# மெழுகுதிரிக்கும் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டின் சில பிரதேசங்களில் மெழுகுவர்த்திக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மின் விநியோக துண்டிப்புக்கான தயார் நிலைகள் காணப்படுவதால், மக்கள் மெழுகுவர்த்திகளை சேகரிக்க ஆரம்பித்துள்ளமையே இந்த நிலைமைக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

அதேவேளை எதிர்காலத்தில் இலங்கையில் மெழுகுவர்த்தியும் உற்பத்தி செய்யப்படமாட்டாது என மின்சார சபையின் கூட்டுத் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்ட பின்னர், கிடைக்கும் மெழுகு கழிவுகள் மூலம் மெழுகுவர்த்திகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மூடப்பட்டுள்ளதால், மெழுகுவர்த்தி தயாரிப்பு நிறுத்தப்பட்டுள்ளது எனவும் ஜெயலால் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned post.

**FACULTY OF SCIENCE**

**Scientific Assistant Grade I/ Grade II**

**Qualifications:**

**Scientific Assistant Grade I**

i. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant subject with 03 years experience after obtaining such degree qualifications.*

**OR**

ii. A Second Class (Lower Division) in a Special Degree Examination in the relevant subject with approved Postgraduate/ Professional qualifications.*

**Scientific Assistant Grade II**

i. A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant subject.*

**OR**

ii. A Second Class (Lower Division) in a Special Degree Examination in the relevant subject.*

**OR**

iii. A pass in the BA/ B.Sc. Special Degree Examination in the relevant subject.*

**OR**

iv. A pass in the BA/ B.Sc. General Degree Examination with a recognized Postgraduate qualification in the relevant subject.*

*** Preference will be given to those who have specialized in Computer Science/ Information Communication Technology / Information Technology / Information Systems / Software Engineering / Computer Engineering**

**Remuneration**

| Post | Salary Code | Salary scale |
|---|---|---|
| Scientific Assistant Grade .I | U-AS-2(II) | Rs.50,625-3×1335 -54,630 (EB) 55,695- 14×1335-74,655/-p.m |
| Scientific Assistant Grade .II | U-AS-1(I) | Rs.48,385-19×690 -61,495/- p.m |

**In addition to the above salary, statutory benefits and the UGC approved allowances will be paid**

**Expected Additional Attributes, Skills and Experience:**
Refer University website www.jfn.ac.lk for required qualifications.

**Closing date:**
Applications **should reach us on or before 31.01.2022.**

Application forms, expected additional attributes and other details will be available in the University website **www.jfn.ac.lk**. Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of **University of Jaffna Collection Account Number: 970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

Perfected applications for the **above posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Applications and referee reports should be in the relevant format. Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

(C-3506)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்லப்பா தர்மலிங்கம் B.Sc(cey)

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், கொழும்பு பிரபல பௌதிகவியல் ஆசிரியர் – brighton institute colombo, demonstrator - peradeniya university, பௌதிகவியல் ஆசிரியர்– நைஜீரியா )

**பிறப்பு - 26.09.1937** **இறப்பு - 11.01.2022**



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை சுவிசுத்தராமவை வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தர்மலிங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை (11.01.2022) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மங்கையற்கரசி தம்பதியினரின் அருமைப் புத்திரனும் பண்டிதர் பொன்னுத்துரை - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் வைத்தியர் ஜனகன் சதாபானுவின் (லண்டன்) பாசமிகு தந்தையும் பாலசுந்தரம்பிள்ளை ஜனகனின் மாமனும் சிறிஸ்கந்தனின் ஆசைப்பேரனும் சிவலோகநாதன் இராஜேஸ்வரி (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரனும் சிவலோகநாதன் (கனடா), யோகேஸ்வரி, சாந்தினி(அவுஸ்திரேலியா), திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு, கலியாணசுந்தரம், பேராசிரியர். பொன்.பாலசுந்தரம்பிள்ளை, டாக்டர் விமலேந்தின்(கனடா), எந்திரி பாலேந்திரன்(கனடா), திருமதி விமலா விஜயகுமார்(கனடா), எந்திரி யோகேந்திரன் (அவுஸ்திரேலியா), ரவீந்திரன் (லண்டன்), புவனேந்திரன்(லண்டன்), நிர்மலாதேவி லோகராஜா(கனடா) காலஞ்சென்ற வற்சலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை (13.01.2022) பிற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் வேலணை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"திருப்பதி", பிரதான வீதி**
**1 ஆம் வட்டாரம், வேலணை.** (9616)

**தகவல்:**
**வைத்தியர் ஜனகன் சதாபானு (மகள்)**

# மரண அறிவித்தல்

## திருமதி
## மாலதி பிரபாகரன்

(தாதிய உத்தியோகத்தர் –மந்திகை ஆதார வைத்தியசாலை)

**மலர்வு - 1978.06.04**

**உதிர்வு - 2022.01.11**



நாகலிங்க முதலியார் வீதி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலதி பிரபாகரன் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (11.01. 2022 ) காலமானார்.

அன்னார் விநாயகமுதலி - குமாரி தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் பிரபாகரனின் அன்பு மனைவியும் வி.விஜயகுமார், வி.விஜயரூபன் ஆகியோரின் சகோதரியும் பி. லக்சியா, பி. திவ்யப்பிரபா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2022.01.12) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல. 16,**
**நா.மு.வீதி,**
**பருத்தித்துறை.**

**077 182 0688** (9622)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2487

**குயிலினி**



மனைவி : கணவன்-மனைவி சண்டைன்னா நாலு சுவத்துக்குள்ளேதான் இருக்கனும்...

கணவன் : அப்ப தப்பிச்சு ஓடக் கூட எனக்கு உரிமை இல்லையா?

**சபேஸ்**

என்ன வாழ்க்கை ரொம்பக் கஷ்டமா இருக்கா கவலைப்படாத தை பிறந்தால் வழிபிறக்கும்




இததான்டா போன வருசமும் சொன்ன

**ரம்யா**

ஒரு பக்கெட் நாய் பிஸ்கட் குடுங்க...



நாய் : நாய் பிஸ்கட்ட உன் புருசனுக்குக் குடு எனக்கு டைகர் பிஸ்கட் குடுங்க

**ரவிகரன்**

பேருந்தில் அழகான பெண்கள் அருகில் அமரும் போது ராமபிரானே மறுபிறவி எடுத்து வந்த மாதிரி ஆண்கள் காட்டும் அடக்க ஒடுக்கம்...!



**குமுதா**

புருசன் திட்டும் போது மனைவி



பொண்டாட்டி திட்டும் போது புருசன்



**கயலவன்**

வீட்டுக்கு வாடா, பிரியாணி போடுறேன்னு Friend சொன்னான் தம்பி...



சரின்னு போனா கார்த்தி நடிச்ச பிரியாணி படத்தப் போடுறான் தம்பி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏழு மூளை கொண்டவரால் நாட்டிற்கு பிடித்த ஏழரை



(கொழும்பு)

ஏழு மூளை உள்ளவரின் செயலால் நாட்டுக்கு ஏழரை பிடித்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிற்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று முன்தினம் பிற்பகல் எண்ணெய் தாங்கிகள் அமைந்துள்ள சீனக்குடாவில் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

1924 ஆம் ஆண்டு எண்ணெய் தாங்கிகளின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1930 அளவில் 101 எண்ணெய் தாங்கிகளும் பூரணமாக நிர்மாணிக்கப்பட்டன. சிட்னியை அடுத்து இரண்டாவது ஆழமான இயற்கை துறைமுகமாக திருகோணமலை துறை முகம் காணப்படுவதால் துறைமுகத்தை அண்டிய பகுதியில் இவை நிர்மாணிக் கப்பட்டன.

இதில் ஒரு தாங்கியில் 12,000 தொன் எண்ணெய் சேமிக்க முடியும். மொத்தமாக 1.2 மில்லியன் தொன் எண்ணெய் இதில் சேமிக்க முடியும்.

இந்த மொத்த தாங்கிகளிலும் 1.2 மில்லியன் எண்ணெய் சேமித்தால் நாளாந்தம் மில்லியன் டொலருக்கு அதிகமான வியாபாரம் எம்மால் செய்ய முடியும். எம்மால் தங்கத்தை விட பெரிய வியாபாரம் ஒன்றை செய்ய முடியும். ஆனால் இதை இலங்கை அரசாங்கம் வெறும் 500 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்கிறது.

அமைச்சர் கம்பன்பிலவின் கட்சியாப்பில் எமது சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பதில்லை என உள்ளது. ஆனால் அவர்தான் இன்று இந்தியாவுக்கு விற்கும் ஒப்பந்தத்தை கைச்சாத்திடவுள்ளார். இவ்வாறான ஒப்பந்தங்களை திருட்டுத்தனமாக நிறைவேற்றிக் கொள்ளவே ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்தி வைத்துள்ளார்.

இன்று அமெரிக்க பிரஜைகள் சுக போகம் அனுபவிக்க நாட்டு மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். (நி-5)

# மூன்று மாதங்களில் நாடு வழமைக்குத்திரும்பும்

## ரமேஷ் பத்திரன நம்பிக்கை

(கொழும்பு)

சந்தையில் பால் மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் அனைவரும் திரவப் பாலை பயன்படுத்த வேண்டும் என இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், பால் மாவை உட்கொள்ளும் நாடுகளில் இலங்கை முன்னணியில் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை எந்தவொரு அரசாங்கமும் பொருட்களின் விலைகளை அதிகரித்து அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மக்கள் வரிசையில் நிற்பதை விரும்புவதில்லை.

கொரோனாத் தொற்றும் டொலர் தட்டுப்பாடுமே தற்போதைய நெருக்கடிக்குக் காரணம் என குறிப்பிட்ட அமைச்சர், கடந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை கொரோனா காரணமாக இலங்கை இழந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரம் எதிர்வரும் மூன்று மாதங்களில் வழமைக்குத் திரும்பும் எனவும் சவால்களை முறியடித்து நாட்டை சரியான பாதையில் இட்டுச்செல்வதில் தற்போதைய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன நம்பிக்கை வெளியிட்டார். (நி-5)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1935 . 04 . 18



மறைவு
2022 . 01 . 08

அமரர். தம்பையா நித்தியரட்ணம்

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி.ஜெயவதி சிறில்தனராஜன்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர். தம்பையா நித்தியரட்ணம் அவர்களின்
மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம். (9611)

பாடசாலைச் சமூகம்,
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.


# அரசாங்கத்தில் இருந்து விலகத் தயார்

## லசந்த அதிரடி

(கொழும்பு)

எந்த நேரத்திலும் அரசாங்கத்தில் இருந்து விலக தமது அணியினர் தயாராக இருப்பதாக நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண அதிரடியாக அறிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

"நாங்கள் எப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே இருக்கின்றோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது அந்த கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல. கட்சியில் நிறைவேற்றுச் சபை, மத்திய செயற்குழு என்பன இருக்கின்றன.

மத்திய செயற்குழு எடுக்கும் எந்த முடிவாக இருந்தாலும் நாங்கள் அதற்கு கட்டுப்படுவோம்.

இதனையே நான் மூன்று மாதங்களுக்கு முன்னர் மத்திய செயற்குழுவில் முன்வைத்தேன்.

எனினும் நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னாலோ பொதுஜன பெரமுனவிக் பின்னாலோ செல்ல மாட்டோம். நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே இருப்போம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இராசிபலன்

12.01.2022
மார்கழி 28, புதன்கிழமை
தசமி முன்னிரவு 8.07 மணிவரை

பரணி பிற்பகல் 5.16 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை

சந்திராஷ்டமம்: அத்தம், சித்திரை
சித்தாமிர்தம்

வளவன்

**மேஷம்:** சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்கள் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம்.

**மிதுனம்:** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வருமானம் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தியுண்டு, விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வழியில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**துலாம்:** பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உற்சாகம் பெருகும் நாள், குடும்பத்தினரிடையே கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியம் சீராகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் நன்மையுண்டு, உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கலகலப்பான செய்தி சில வந்து சேரலாம்.

**மகரம்:** வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுபகாரிப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

உன்னில் மனிதம் மலரும் போது மகிழ்ச்சியும் மலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பிராந்திய மருத்துவமனைகளில் நடமாடும் மருத்துவ சேவைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் வீட்டில் இருந்து மருத்துவமனைக்கு அழைத்து வர முடியாத நிலையில் உள்ள முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மோசமடைந்து செல்லும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு வீட்டில் வழங்கக்கூடிய மருத்துவ பராமரிப்பு சேவைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர். மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இத்திட்டமானது பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை போன்ற ஆதார மருத்துவமனைகள் மூலம் முன்னெடுக்கப்பட உள்ளது. இம்மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றிற்கு காலை 8 மணி முதல் மாலை 4 வரை அழைப்பதன் மூலம் தமக்கு வழங்கப்பட வேண்டிய பராமரிப்பினை முன்பதிவு செய்ய வேண்டும்.

அந்த வகையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை - 021 226 3262, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை - 021205 9227, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை -021 227 1150, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை - 021 221 1660 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் தரப்பட்டுள்ளன.

இச்சேவை மூலம் அவசர மருத்துவ சேவைகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. அவசர மருத்துவ தேவைகள் ஏற்படின் 1990 அவசர அம்புலன்ஸ் சேவையை அழைப்பதன் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-33)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பம் சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துங்கள்

### வலி.மேற்கு பிரதேச சபை

(அராலி)

"வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் பிரதேச மக்கள் அனைவரும் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்குமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

நீரேந்து பொருட்களான தகரங்கள், பேணிகள், சிரட்டைகள், பழைய டயர்கள், வெற்றுப் போத்தல்கள் மற்றும் இளநீர் கோம்பைகள் போன்ற பொருட்களை உடனடியாக அகற்றி டெங்கு நுளம்பு பெருகுவதை கட்டுப்படுத்துமாறும் தெரிவித்தனர்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க தவறும் பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவீர்கள் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (4-5-104)

## கலைஞருக்கான ஊக்குவிப்பு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் வாழ்ந்து வரும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான நிதியுதவியினை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டத்தின் ஊடாக வழங்குவதற்கான நடவடிக் கையை யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தர மதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர். இதற்கு தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவு டன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் ப்பாண பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் அறி வித்துள்ளார். (4-5)

## கைகலப்பில் ஈடுபட்டவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையத்தில் இலங்கை போக்குவரத்து சபை சாரதி மற்றும் நடத்துநருடன் கைகலப்பில் ஈடுபட்ட முக்கிய நபரை போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபரை கைது செய்யும் போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இரு பெண்களையும் கைது செய்து மூவரையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (4-5-60)

## சைக்கிள் திருடியவர் மடக்கி பிடிப்பு

(கரணவாய்)

வீடு ஒன்றில் அத்துமீறி நுழைந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை திருடிச் சென்ற இளைஞர் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மந்திகை பகுதியிலுள்ள வீடு ஒன்றில் அத்துமீறி நுழைந்து துவிச்சக்கர வண்டியைத் திருடிச் சென்ற இளைஞனையே பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (4-5-60)

## சஜித் இன்று தென்மராட்சிக்கு விஜயம்

(சாவகச்சேரி)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ இன்று புதன் கிழமை தென்மராட்சிப் பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார மருத்துவமனை, மாலை 4 மணிக்கு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் மற்றும் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் ஆகியவற்றுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (4-5-30)

## வர்த்தகர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தியவர் கைது

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 24 வயதுடைய ஒருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கொக்குவில் மற்றும் மானிப்பாய் ஆகிய பகுதிகளில் வன்முறைகளில் ஈடுபட்ட நிலையில் அவர் மீது நீதிமன்றங்களில் குற்றச்சாட்டுகளும் உள்ளன. நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு முன்பாக அண்மையில் 28 வயதுடைய வர்த்தகர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலை இருவர் மேற்கொண்ட நிலையில் பிரதான சந்தேக நபர் தெல்லிப்பழை பகுதியில் தலைமறைவாகியிருந்த வேளை மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். (4-5-33)

## பசுமை விவசாய வீட்டுத்தோட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் சேதன உள்ளீடுகளை ஊக்குவிக்கும் பசுமை விவசாய மாதிரி வீட்டுத் தோட்டம் நாளை 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ளது என வலயக்கல்விப் பணிப் பாளர் [illegible] அறிவித்துள்ளார். (4-5)

# குறை'களை' பதிகம்

## மானிப்பாய் வீதி திருத்தம் மந்தகதியில் கவனிப்பாரில்லையோ இங்கு?




*மானிப்பாய் வீதி திருத்தம்*
*மந்த கதியில் நடப்பது ஏனென்று*
*கேட்பார் இல்லையோ இங்கு?*

*வீதி சீரில்லை- திருத்த*
*நடவடிக்கை எடுங்கள் என*
*பேப்பர் முதல் பேஸ்புக் வரை*
*எழுதெழுதென்று எழுதினர்*

*வீதி திருத்தப் பணி தொடங்கியதும்*
*'நன்று' என்று பதிவிட்டு*
*அன்றோடு நின்றுவிட்டர்*

*இன்று அது ஆமையிலும் மெதுவாய்*
*நகர்கிறது... நகர்கிறது...*
*நகர்ந்து கொண்டேயிருக்கிறது*

*மானிப்பாய்ச் சந்தியில் இருந்து*
*ஆனைக்கோட்டை மதவடி வரை*
*பயணிகள் படும்பாடு*
*பெரும்பாடு பரமனே!*

*அதிலும்;*
*மானிப்பாய்ச் சந்தை முகப்பு*
*படுகுழிகள் நிறைந்த*
*புதைகுழியாய்க் கிடக்க,*
*அதைக்கடந்து செல்வோர் நிலை*
*கொடுமையிலும் கொடுமை!*

*வீதிகளின் படுகுழியில்,*
*வெள்ளநீர் நிறைந்து நின்றால்*
*அதைக் கடந்து செல்வோர் நிலை...*
*ஐயகோ!*
*ஈரக்குலை நடுங்குகிறதே!*

*மானிப்பாய் வீதி திருத்தம்*
*மந்த கதியில் சென்றாலென்ன?*
*எந்த கதியில் சென்றாலென்ன?*
*என்றிருக்கும் அதிகாரிகளே!*
*அந்தரிக்கும் மக்களுக்காய்*
*அந்தக் குழிகளில்-கொஞ்சம்*
*கல்லை நிறைத்து*
*காபந்து பண்ணுங்களேன்;*
*மக்கள் உயிரை*

**மாவை. நா.கஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொருளாதாரம் மந்த கதியில்!

## வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் திணறல்

(கொழும்பு)

**வளர்ச்சி அடைந்துவரும் உலக நாடுகள் எதிர்வரும் நாட்களில் கடினமான தருணங்களை எதிர்கொள்ள நேரிடும் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.**

நிலுவையாக உள்ள கடன்களை செலுத்தும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் பாரிய இக்கட்டான நிலைமையை எதிர்கொண்டுள்ள நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பானது இலங்கையை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமெரிக்க மத்திய வங்கி, வட்டி விகிதங்களை உயர்த்துவதற்கு தயாராகிவரும் அதேவேளை, ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக உலகப் பொருளாதார வளர்ச்சியும் மந்தமடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக வளர்ச்சி அடைந்துவரும் பொருளாதாரத்தைகொண்ட உலக நாடுகள் கடினமான நிலைமையை எதிர்கொள்ள நேரிடும் எனவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நாடுகள் ஏற்கனவே உலகப் பொருளாதார மீட்சியில் பின்தங்கியுள்ளதாகவும், இதனால் மேலதிக சவால்களை உள்வாங்கும் திறன் அந்த நாடுகளுக்கு குறைவாக இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

வளர்ந்து வரும் பொருளாதார நாடுகள் "அவர்களின் சூழ்நிலைகள் மற்றும் பாதிப்புகளின் அடிப்படையில், நெருக்கடியை எதிர்கொள்வதற்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார கணிப்பீடுகளை எதிர்வரும் 25 ஆம் திகதி வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ள சர்வதேச நாணய நிதியமானது, தொற்றுநோயின் அழிவுகளிலிருந்து உலகப் பொருளாதார மீட்சியானது இவ்வாண்டும் அடுத்த ஆண்டும் நீடிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

எனினும் கொரோனாத் தொற்றின் ஒமிக்ரோன் மீளெழுச்சியானது, வளர்ச்சி தொடர்பான அபாயங்களை அதிகளவில் ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

### 3 இலட்சம் மெற்றிக் தொன்

# அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

300,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிச் சந்தையில் தேவையான அரிசி கிடைப்பதை உறுதி செய்வதற்காக சம்பா அரிசிக்கு மாற்றாக 200,000 மெற்றிக் தொன் நாட்டு அரிசியை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 100,000 மெற்றிக் தொன் ஜிஆர் 11 குறுகிய தானிய அரிசி வகையை இறக்குமதி செய்யவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. (நி-5)

# வெலிஓயாவில் சீனித்தொழிற்சாலை

(கொழும்பு)

லங்கா சீனிக் கம்பனியின் கீழ் புதிய சீனித் தொழிற்சாலையொன்றை மொனராகலை மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்தை மையமாகக் கொண்டு புதிதாக நிறுவுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டிற்கு வருடாந்தம் 600,000 மெற்றிக்தொன் சீனி தேவை.

அவற்றில் 85 சதவீதமானவை இறக்குமதி செய்யப்படுவதுடன், அதற்காக வருடாந்தம் 45 பில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் உள்ளூரில் 54 ஆயிரம் மெற்றிக்தொன் சீனி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த தொகையை மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய, லங்கா சீனிக் கம்பனியின் கீழ் புதிய சீனித் தொழிற்சாலையொன்றை மொனராகலை மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்தை மையமாகக் கொண்டு புதிதாக நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 1<br>கி.பா: 14 1/2 சூரி.செவ் 5இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: பலசரக்கு கடை (சொந்தம்)<br>தொ.இ: B/6314 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:46 சூரி 6 செவ் 8 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்:BBA தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ:G/6027 |
| பிறப்பு:1989 இந்து நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 13 சூரி.செவ் 11 இல்<br>உயரம்:160cm<br>தகைமை/தொழில்: A/L அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வேலை அவசியமில்லை சாதகம் பொருந்த வேண்டும்<br>தொ.இ: B/6316 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:பூசம்3<br>கி.பா:-78 சூரி 1 செவ் 7இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:A/L டயலொக்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/6035 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 3<br>கி.பா:-செவ் 11 சூரி 1 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:O/L (UK Not PR) கடை (தனியார்)<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6330 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:58 ¼ சூரி1 செவ் 4 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: A/L /தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (கனடா,சுவிஸ்)<br>தொ.இ:G/6034 |
| பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா:78 சூரி 1 செவ் 8இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:A/L பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் உயரம் 5'<br>தொ.இ: B/6333 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 38 சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Diploma in law<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு அல்லது அரசதொழில்<br>தொ.இ:G/6071 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம் 27, கல்விளான் வீதி, வட்டாரம்-01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 01 கல்விளான் வீதியிலுள்ள இல.27 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை **நிறசிங்கம் கனகரத்தினம்** பிரசித்த நொத்தாரிசு இ.கந்தையா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 16305/10.07.1948 ஆம் இலக்க உறுதியால் **கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் கைம்பெண் செல்லமுத்துவும், வயிரமுத்து அம்பலவாணர் கைம்பெண் ஆச்சிக்குட்டியும், ஆறுமுகம் சரவணமுத்து கைம்பெண் தெய்வானைப்பிள்ளையும், கந்தையா தம்பிராசாவும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை **முருகேசு சிவகுருவும் பெண் தெய்வானைப்பிள்ளையும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.கந்தையா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 17131/26.10.1949 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நிறசிங்கம் கனகரத்தினம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தினை **அம்பிகைபாகர் ஆறுமுகம் பெண் இராசம்மா என வழங்கும் இராசலட்சுமி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4368/25.05.1958ஆம் இலக்க உறுதியால் குறித்த **முருகேசு- சிவகுருவும் பெண் தெய்வானைப்பிள்ளையும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தில் ஓர் பகுதியினை **வேலன் நடராசாவும் பெண் இலட்சுமியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15776/10.02.1994 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பிகைபாகர் ஆறுமுகம் கைம்பெண் இராசம்மா என வழங்கும் இராசலட்சுமி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்றுச் சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தில் ஓர் பகுதியினை **சதாசிவம் வசந்தனும் பெண் தேவறாஜினியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ச.தவகுணராஜசிங்கம் முகதாவில் 299/12.06.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலன் நடராசாவும் பெண் இலட்சுமியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சதாசிவம் வசந்தனும் பெண் தேவறாஜினியும்** ஆகியவர்கள் ஆதன பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சதாசிவம் வசந்தனும் பெண் தேவறாஜினியும்** ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/ செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(9612)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனுக்கு பன்றி இதயம் பொருத்தி மருத்துவர்கள் உலக சாதனை

(வோஷிங்டன்)

**உலகில் முதன்முறையாக மனிதனுக்கு மரபணு ரீதியாக சில மாற்றங்கள் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை பொருத்தி அமெரிக்க மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.**

பன்றியின் இதயத்தை பொருத்தி இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட உலகின் முதல் மனிதன் என பெருமையை 57 வயதான அமெரிக்கர் டேவிட் பென்னட் பால்டி மோர் என்பவர் பெற்றுள்ளார்.

7 மணி நேரங்கள் நடந்த இந்த பன்றி இதயமாற்று அறுவை சிகிச்சைக்குப் பின்னர் கடந்த 3 நாட்களாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட நபர் நலமாக உள்ளார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாவிட்டால் பென்னட் இறப்பை தவிர்க்க முடியாது என மேரிலாண்ட் பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் உள்ள மருத்துவர்கள் தெரிவித்துவிட்டனர். இதன் அடிப்படையில் பன்றி இதய மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள அமெரிக்க மருத்துவக் கட்டுப்பாட்டாளரால் விசேட அனுமதி வழங்கப்பட்டது.

மனிதருக்கு பன்றி இதயத்தைப் பொருத்தி அறுவைச் சிகிச்சை செய்வது தொடர்பான ஆய்வுகள் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த அறுவைச் சிகிச்சை இந்த ஆய்வின் உச்சமாக உள்ளது. இந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தால் உலகம் முழுவதும் பலரின் வாழ்க்கையை இது மாற்றலாம் என மருத்துவர்கள் தெரிவித்தனர். (நி-5)

## தடுப்பூசி போடுவது ஒரு தார்மீகக் கடமை போப்பாண்டவர்

(ரோம்)

தடுப்பூசிகள் குணப்படுத்துவதற்கான ஒரு மாயா ஜால வழிமுறை அல்ல. அது நோயைத் தடுப்பதற்கான மிகவும் நியாயமான தீர்வு என்று போப்பாண்டவர் பிரான்ஸிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 'தனிநபர்கள் தங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளது.

இது நம்மைச் சுற்றியுள்ளவர்களின் ஆரோக்கியத்திற்கு மரியாதை அளிக்கிறது. சுகாதார பாதுகாப்பு ஒரு தார்மீகக் கடமையாகும்' என்று வலியுறுத்தினார். (நி)



ஒரு வாரத்தில் இரண்டாவது ஏவுகணை சோதனை

## வடகொரியாவின் செயற்பாட்டால் உலக நாடுகள் அச்சம்

(பியாங்யாங்)

வட கொரியா தனது கிழக்குக் கடலில் ஒரு பாலிஸ்டிக் ஏவுகணையை சோதனை செய்துள்ளதாக தென்கொரியா மற்றும் ஜப்பான் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை தென்கொரியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் உள்ள கடல் பகுதியில் ஒரு வெளிப்படையான பாலிஸ்டிக் ஏவுகணை ஏவப்பட்டதையும் சியோல் உறுதிப்படுத்தியது.

வடகொரியா ஒரு பாலிஸ்டிக் ஏவுகணையை கடலில் செலுத்திய ஆறு நாட்களுக்குப் பிறகு இந்த பரிசோதனை நடந்தது. (நி-5)

## பெண் ரோபோவை திருமணம் செய்த நபர்



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவை சேர்ந்த நபர் ஒருவர் பெண் ரோபோவை திருமணம் செய்து கொள்ளப்போவதாக அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தைச் சேர்ந்தவர் ஜியோப் கல்லாகர்.

இவரது தாயார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட தனியாக வாழ்ந்து வந்துள்ளார்.

அப்போது, 2019 ஆம் ஆண்டு பெண் ரோபோ ஒன்றை வாங்கி, அதற்கு எம்மா என பெயர் சூட்டியுள்ளார்.

2 ஆண்டுகளுக்கும் மேலாக எம்மாவுடனே இருப்பதால், அதை விட்டு பிரிய மனமில்லாத காரணத்தினால் அதை திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்துள்ளாராம்.

இதற்காக அவர் எம்மாவின் விரலில் மோதிரத்தை அணிவித்துள்ளார். அந்த ரோபோ மிகவும் யதார்த்தமாக இருக்கிறது.

பேசவும், புன்னகைக்கவும், தலையையும் கழுத்தையும் அசைக்கவும் அதனால் முடியும், எம்மா மிகவும் புத்திசாலியாகி, தகவல்களை உள்வாங்கி, புதிய வார்த்தைகளைக் கற்றுக் கொண்டதாக கல்விக்கிறார் ஜியோப் கல்லாகர். (நி-5)

## இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் தமிழகத்தில் ஜல்லிக்கட்டிற்கு அனுமதி

(சென்னை)

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜல்லிக்கட்டு நிகழ்வினை நடத்துவதற்கான அனுமதியினை தமிழக அரசு வழங்கியுள்ளதுடன், அதற்கான விரிவான சுகாதார வழிகாட்டுதல்களையும் வெளியிட்டுள்ளது.

கொவிட்-19 பரவல் அதிகரித்துள்ள நிலையில், இவ்வாண்டு ஜல்லிக்கட்டு நிகழ்வு நடைபெறுமா? என்ற சந்தேகம் எழுந்த நிலையில் இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (நி-5)



## ரோஹிஞ்யா அகதி முகாமில் தீ விபத்து 1200 குடிசைகள் தீக்கிரை

(டாக்கா)

பங்களாதேஷின் தென் கிழக்கில், காக்ஸ் பஜார் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ரோஹிஞ்யா அகதிகள் முகாமில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கர தீ விபத்து ஏற்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 1,200 குடிசைகள் எரிந்து சாம்பலானதாகவும், இந்த விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரோஹிஞ்யா அகதிகள் முகாமின் சில பகுதிகள் தீயில் எரிந்ததால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை.

முஸ்லிம் சிறுபான்மையினரில் பலர் மியன்மாரில் 2017 ஆம் ஆண்டு இராணுவ ஒடுக்குமுறையிலிருந்து தப்பித்துச் சென்று பங்களாதேஷின் எல்லை மாவட்டமான காக்ஸ் பஜாரில் உள்ள முகாம்களில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கடத்தல் முறியடிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் 4 வேப்ப மரக்குற்றிகள் ஏற்றி சென்ற கப்ரக வாகன சாரதி இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இதன்போது 4 வேப்ப மரக் குற்றிகளும் கப்ரக வாகனமும் இராணுவத்தினரால் மீட்கப் பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவரை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (4-5-316)





# வர்த்தக சந்தை யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தைப் பொங்கலை முன்னிட்டு பற்றிக் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் நடத்தும் 2022 ஆம் ஆண்டுக்கான மாபெரும் வர்த்தக சந்தை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொழில் முனைவோர் உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப்பொருட்களை காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தியிருந்தனர். இந்த வர்த்தகச் சந்தை இன்றும் இடம்பெறும்.

பற்றிக் கைத்தறி ஆடைகள், கருப்பட்டி, ஒடியல் உள்ளிட்ட பனை உற்பத்திப் பொருட்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட தென்னை உற்பத்திப் பொருட்கள், நல்லெண்ணெய், ஊதுபத்தி, பாரம்பரிய உணவு உற்பத்திகள், மட்பாண்ட உற்பத்திகள், கைப்பணிப்பொருட்கள் உள்ளிட்ட உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன. (4-5-33)

# கொவிட் சிறப்பு தடுப்பூசி வாரம்

(பனிக்கன்குளம்)

கொவிட் கட்டுப்பாட்டை மேலும் வினைத்திறனாக்கும் நோக்கில் நேற்று 11 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை கொவிட் சிறப்பு தடுப்பூசி வாரமாக முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இச் செயற்பாட்டினை மாவட்ட மட்டத்தில் விரைவுபடுத்தி மேற்கொள்வதற்கான கலந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கொவிட்-19 நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் பயனுள்ள தடுப்பூசி வேலைத்திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. (4-5-281)

# எரிந்து சாம்பலான வீட்டை
## புனரமைக்க உதவிய மாநகர முதல்வர்

(தருமபுரம்)

மன்னார் மாவட்டத்தில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதில் முற்றுமுழுதாக எரிந்து சாம்பலாகிய வீட்டினை புனரமைத்து கொடுப்பதற்கு யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உதவியளித்துள்ளார்.

அண்மையில் மன்னாரில் எரிவாயு வெடித்ததில் மாவட்டத்தில் தற்காலிக வீடு ஒன்று முழுமையாக எரிந்து சாம்பலாகியது. இந்நிலையில் வசிப்பதற்கு வீடு இல்லாமல் நிர்க்கதிக்குள்ளான நிலையிலிருந்த வீட்டு உரிமையாளர் யாழ்.மாநகர முதல்வருடன் தொடர்புகொண்டு உதவி கோரிய நிலையில் தற்காலிகமாக வசிப்பதற்கு ஏற்ற வகையில் வீட்டைக் கட்டி முடிப்பதற்காக சீமெந்து மற்றும் வீடு கட்டுவதற்கான உதவிப் பொருட்கள் நேற்று முன்தினம் யாழ். மாநகர முதல்வரால் வழங்கி வைக்கப்பட்டன. (4-5-316)

# 39 டெங்கு நோயாளர்கள் கிளிநொச்சியில் அடையாளம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம் மாதம் 1 ஆம் திகதி முதல் நேற்று வரை டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் பெய்து வருகின்ற பருவ மழையைத் தொடர்ந்து டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கரைச்சிசுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மட்டும் 21 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா, டெங்கு என்பன ஒரே அறிகுறிகளை வெளிப்படுத்துவதால் மக்கள் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

கொரோனா மூன்றாவது தடுப்பூசி ஏற்றுவதில் மக்கள் பொறுப்புற்ற விதத்தில் செயற்படுவதாகவும் கிளிநொச்சியில் இதுவரையில் 12 வீதமானவர்களே மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (4-5-316)

# கஞ்சா கடத்திய இருவர் வவுனியாவில் கைது



(நெளுக்குளம்)

முல்லைத்தீவிலிருந்து கொழும்புக்கு கேரளக் கஞ்சாவினை கடத்தி சென்ற இளைஞர்கள் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவில் இருந்து கொழும்பு நோக்கி மகேந்திரா ரக வாகனத்தில் கஞ்சாவைக் கடத்திச் சென்ற போது பூவே சோதனைச்சாவடியில் வழிமறித்து சோதனை மேற்கொண்ட இராணுவம் மற்றும் பொலிஸார் வாகனத்தில் பயணித்த முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 22, 39 வயதுடைய இரு இளைஞர்களை 22 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-5-299)

# நடமாடும் மருத்துவ சேவைக்கு தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(நெளுக்குளம்)

வவுனியா மருத்துவமனை ஊடாக நோயாளர் வீட்டுத் தரிசிப்பு செயற்றிட்ட நடவடிக்கை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி க.ராகுலன் தெரிவித்தார்.

இந்நடவடிக்கைக்கு விசேட தொலைபேசி இலக்கமான 077 277 2677 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்வதன் ஊடாக இச்சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இச் சேவையைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு எவ்வளவு கால நேரத்திற்குள் இச் சேவையை வழங்க முடியும் போன்ற விபரங்கள் வழங்கப்படும்.

முதற்கட்டமாக வவுனியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இச் சேவையை வழங்குவதுடன் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரையும் இச் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இச் சேவையை வெற்றிகரமானதாக கொண்டு செல்வதற்கு பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (4-5-299)

# தீர்க்கப்படாத நிலையில் மாணவர்களின் போக்குவரத்து

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடி இன்னமும் தீர்த்து வைக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

மாந்தை கிழக்கு மாணவர்கள் காலையில் பாடசாலைக்கு செல்ல இடம்பெறும் தனியார் பேருந்து சேவை மாணவர்கள் வீடு திரும்புவதற்கு இடம்பெறுவதில்லை.

கடந்த டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் துணுக்காயில் இருந்து மாணவர்கள் வீடு திரும்பும் வகையில் தனியார் பேருந்து சேவையில் ஈடுபடும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் தற்போது வரை பேருந்து சேவைகள் நடைபெறாததன் காரணமாக மாணவர்கள் வீடு திரும்புவதில் நெருக்கடிகள் காணப்படுகின்றன.

மாவட்டச் செயலகத்தில் கூட்டம் நடத்தி முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் அந்நடைமுறைகளை முல்லைத்தீவு தனியார் பேருந்து சங்கத்தால் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மாந்தை கிழக்கு பெற்றோர்களின் கோரிக்கையாகும். (4-5-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பட்டியலில் இருந்து மக்கள் வங்கியை நீக்கியது சீனா

(கொழும்பு)

இலங்கை மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இருந்து சீன தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக செயலகம் நீக்கியுள்ளது. கடந்த 2021 ஒக் . டோபர் 29 ஆம் திகதி ஒப்பந்த த்தை மீறியமையால் இல ங்கை மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இணைத்தது. கடன் பத்திரத்திற்கு அமைய குறித்த கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ள தாக சீன தூதர்கத்துக்கு மக்கள் வங்கி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## விலங்குகள் நல சட்டமூலத்திற்கு அமைச்சரவை பச்சைக்கொடி

(கொழும்பு)

விலங்குகள் நலச் சட்ட மூல த்தை அரசாங்க வர்த்தமானி யில் வெளியிடுவதற்கும் விலங் குகள் நல சட்டமூலத்தை பாரா ளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2020 ஆம் ஆண்டு ஒக் டோபர் 19 ஆம் திகதி விலங்கு கள் நலச் சட்டமூலத்தை உரு வாக்குவதற்கு அனுமதி வழ ங்கப்பட்டது.

இலங்கையின் சட்ட வரை வாளரால் உருவாக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார் என அரசாங்க தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது.(நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## எதிரிகளை வெல்லும் வரம் தரும் நரசிம்மர்



### துன்பங்கள் போக்கும் சந்தனாபிஷேகம்

தன் பெயரை சொல்ல மறுத்து 'ஓம் நமோ நாராயணாய நம' என பகவானின் நாமத்தை கூறிய பிரகலாதனை, இரண்ய கசிபு கல்லைக்கட்டி கடலில் போட்டு விட்டான். அவன் வெளியில் வர முயாதபடி பெரிய மலையையும் அவன் மேல் போட்டு அழுத்தினான். பக்தனை காப்பாற்ற பெருமாள் அம் மலையை பிளந்தார். அவரது கோபத்தை தணிக்க நரசிம்மருக்கு சந்தானாபிஷேகம் செய் வார்கள். நரசிம்ம ஜெயந்தி அன்று நரசிம்மருக்கு சந்தனாபிஷேகம் செய்தால், வாழ்வில் உண்டாகும் துன்பங்களை போக்கி பக்தர்களை காத்து அருளாசி புரிவார்.

கருவில் வளரும் குழந்தைக்கு அஷ்டாட்சர மந்திரத்தை கூறி வந்தார். சகல சாஸ்திரங்களையும் கற்பித்து தர்மாபுதேசம் செய்தார்.

இதற்கிடையே இரண்யகசிபுவின் கடும் தவத்துக்கு மகிழ்ந்த பிரம்மன் அவன்முன் தோன்றினார். இரண்ய கசிபு மகிழ்ச்சியுடன் மிக பணிவாக பிரம்ம தேவனை வணங்கி நின்றான். இரண்யகசிபு என்ன வரம் வேண்டும் என்று கேள் என்றார்.

அவனோ, 'இந்த மூவுலகையும் ஆளும் வல்லமை வேண்டும். இர விலோ, பகலிலோ, தேவர்களாலோ, மனிதனாலோ, விலங்கினாலோ, பறவை யாலோ, ஆயுதங்களாலோ, நீரிலோ, நிலத்திலோ, ஆகாயத்தாலோ எனக்கு மரணம் ஏற்படக் கூடாது. என் உடலில் இருந்து ஒரு சொட்டு இரத்தம் நிலத்தில் சிந்தினாலும், என்னைக் கொல்ல முயற்சிப்பவன் தலை சுக்கு நூறாக வெடித்துவிட வேண்டும்' என்றான். அவ்வாறே வரம் அளித்தார் பிரம்மன்.

பின்னர் இரண்யகசிபு தனது நகரத் திற்கு திரும்பினான். இதற்கிடையே கயாது அழகிய மகனை பெற்றெடுத் திருந்தாள். நாரதர் கயாதுவையும், அவள் குழந்தையையும் அழைத்து வந்து அவனிடம் ஒப்படைத்தார்.

இரண்யகசிபு பிரம்மதேவர் கொடுத்த வரத்தின் பலத்தால் மூன்று உலகங்க ளையும் ஆட்சி செய்தான். தேவர்களை யும், முனிவர்களையும் கொன்று குவித்தான். தனது சகோதரனைக் கொன்ற நாராயணன் பெயரை ஒருவரும் சொல்லக் கூடாது என்று கட்டளை யிட்டான். ஒரு நாள் பிரகலாதனை அழைத்து குருவிடம் கற்றவற்றில் சிலவற்றை கூறும்படி கேட்டான். அதற்கு அவன் நான் என்ற கர்வம் யாரிடமும் இருக்கக் கூடாது. உலக வாழ்க்கையே மாயை. ஸ்ரீமன் நாராயணனை தியானம் செய்வதே சிறந்தது என்று கூறினான்.

இதைக்கேட்ட இரண்யகசிபுவுக்கு கடும் கோபம் வந்தது. மகனை மலை உச்சியில் இருந்து உருட்டிவிடும்படி காவலர்களுக்கு கட்டளையிட்டான். அதன்படியே காவலர்கள் மலையில் இருந்து உருட்டிவிட்டனர். பிரகலாதன் நாராயணனை தியானம் செய்தான். சிறுகாயமின்றி தப்பினான். நடந்த விபரம் இரண்யகசிபுக்கு தெரியவர, அவன் கொடிய நாகத்தைவிட்டு கடிக்கச் சொன்னான். பாம்பு சீறி வந்தது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## எரி காயங்களுடன் யானைக்குட்டி சடலமாக மீட்பு



(புத்தளம்)

புத்தளம், தோனிகல காட்டுப் பகுதியில் காயங்களுக்கு உள்ளான நிலையில் நேற்று முன்தினம் இரவு யானைக் குட்டியொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி கள் தெரிவித்தனர்.

காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்கு பூசணிக் காய்க ளில் வைக்கப்பட்ட பட்டாசை குறித்த யானைக் குட்டி உட்கொண்டமையினால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர். (நி-5)

## பாதசாரி கடவையில் பறிபோன உயிர்

(கொழும்பு)

நாவலப்பிட்டி பொது பேருந்து தரிப்பிடத்திற்கு அருகிலுள்ள பாதசாரிக் கடவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கினிகத்ஹேனையிலிருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து பாதசாரி கடவையை கடக்க முற்பட்ட பெண்ணொ ருவரை மோதியுள்ளது.விபத்தில் படுகாயமடைந்த பெண் நாவலப்பிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 550 | 450 |
| தக்காளி | 180 | 170 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 70 | 50 |
| கோவா | 300 | 240 | 240 | 280 |
| கரட் | 350 | 420 | 400 | 400 |
| பூசணி | 80 | 70 | 80 | 100 |
| புடோல் | 200 | 250 | -- | 280 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 200 | 150-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 140 | 160 |
| பாகற்காய் | 350 | 250 | 350 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 110 | 120 |
| பயற்றங்காய் | 350 | 300 | 350 | 300 |
| லீக்ஸ் | 320 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | -- | 340 | -- | 400 |
| கறிமிளகாய் | 350 | 500 | 600 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | 1000 |
| போஞ்சி | 250 | 300 | 250 | 320 |
| கத்தரிதம்புள்ள | 260 | 240 | -- | 270 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 100 | 80 |
| தேசிக்காய் | 140 | 150 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-90 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 240 | 200 | 300 |
| வெங்காயப்பூ | 380 | 400 | -- | 600 |
| முள்ளங்கி | 160 | 100 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுசில் வகித்த பதவியை தினேஷிடம் வழங்கினார் ஜனாதிபதி





(கொழும்பு)

பதவி நீக்கம் செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கீழ் இருந்த விடயங்கள் மற்றும் நிறுவனங்கள் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி நிறுவனம் என்பனவே கல்வி அமைச்சரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

10 அமைச்சுக்களின் விடயதானங்களை திருத்தியமைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலேயே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது. (நி-5)

# இலங்கையை நோக்கி படையெடுக்கும் வெளிநாட்டுத் தலைவர்கள்

(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேச உறவுகளில் பலவீனமடைந்துள்ளதென கடந்த வாரங்களில் சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனால் இது முழுமையான பொய் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அதேவேளை, உலகத் தலைவர்கள் அதிகளவானோர் இலங்கைக்கு வருகை தந்த ஒரு மாதமாக இந்த மாதம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

ஒரே மாதத்தில் அதிகளவான வெளிநாட்டு தலைவர்கள் இலங்கைக்கு வந்த வரலாறே இலங்கையில் இல்லை. எனவே எமது அரசாங்கம் தொடர்பில் வெளிநாட்டு சமூகங்களுக்கு எவ்வளவு நம்பிக்கை உள்ளதென்று இதன்மூலம் தெரிய வருகிறது என்று சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு வருகை தந்த சீனாவின் வெளிவிவகார அமைச்சருடன் பயனுள்ள வகையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

இன்று ஹங்கேரி நாட்டின் வெளிவிவ கார அமைச்சரும் 18 ஆம் திகதி பிரித்தானியாவின் அமைச்ச ரான டரிக் ஆமதும், 19 ஆம் திகதி கொரிய பாராளுமன்றத் தின் சபாநாயகரும் இந்த மாத இறுதியில் துருக்கியின் வெளிவிவகார அமைச்சரும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான உலகத் தலைவர்கள் ஒரே மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சந்தர்ப்பம் தனது நினைவுக்கு எட்டிய வகையில் எப்போதும் நடந்ததில்லை எனவும் தெரிவித்தார்.

இதன்மூலம் மிகவும் பலமிக்க வகையில் இலங்கையின் சர்வதேச உறவுகளை வலுப்படுத்த அரசாங்கத்தால் முடிந்துள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# வாக்குமூலம் வழங்க வந்த பெண் மாடியில் இருந்து குதித்து தற்கொலை

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவு கட்டடத்தின் 5 ஆவது மாடியில் இருந்து குதித்து பெண்ணொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிதி மோசடி தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக குறித்த பெண் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு வருகை தந்துள்ளதாகவும் 46 வயதுடைய குறித்த பெண் 60 மில்லியன் நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# ஒமிக்ரோன் தொற்றாளர் நாவலப்பிட்டியில் அடையாளம்

(கொழும்பு)

நாவலப்பிட்டி- புதிய திஸ்பனை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பகுதியிலிருந்து ஒமிக்ரோன் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர் இந்தியப் பிரஜை என்றும், இவர் இலங்கைப் பெண்ணொருவரை திருமணம் முடித்து ஹப்புகஸ்தலாவை பகுதியில் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் அண்மையில் உகண்டாவிலிருந்து இலங்கைக்கு வருகைத தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உள்நாட்டு உரக்கொள்வனவிற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

(கொழும்பு)

2022 கால போகத்திற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த உள்நாட்டு உரங்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவினால் இரண்டு அரசாங்க உர நிறுவனங்கள் ஊடாக குறித்த கொள்வனவுக்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், கால போகத்துக்காக விவசாயிகளுக்கு உள்ளூர் சேதன உரங்களை வழங்குவதற்காக உரக் கொள்வனவு நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உர மானியத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி இந்த கொள்முதல் நடவடிக்கை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## உள்ளத்து ஊனங்கள்

கணவன்-மனைவி; முதலாளி-தொழிலாளி, பங்குதாரர்கள், நண்பர்கள் இவர்களுள் பெரும்பாலானவர்களிடையே நிலைத்து நிலவும் அம்சம்-சந்தேகம் என்பது.

பயனற்ற ஊகங்கள் மனத்தை செல்லரித்தும் குடைந்தும் சின்னாபின்னமாக்குகின்றன. உள்ளத்தை ஊனமாக்குகின்றன.

ஆனால் அத்தகைய சந்தேகங்கள் பெரும்பாலும் தெளிவில்லாதபடி, இப்படியும் இருக்கலாம்; அப்படியும் இருக்கலாம் என்பதற்காகவே இருக்கும்.

மனத்தில் களங்கம் என்னும் சேற்றை நிரப்பிக்கொண்டு நல்லவர்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதென்பது கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு வெண்மைப் பொருளைப் பார்ப்பதற்கு ஒப்பாகும்.

இத்தகைய மனப்போக்கை ஏற்படுத்திக் கொண்டவர்களின் திறமை தீய்ந்து போகும். அறிவு அருக ஆரம்பிக்கும். உறவுகள் கெடும். மனத்தில் அமைதி என்பதே அபூர்வமாகிவிடும்.

இதிலிருந்து விடுபட என்னதான் வழி?

சந்தேகம் எழ இயலாத வகையில் சூழ்நிலையை ஒட்டித் தக்க ஏற்பாடுகளைச் செய்துவிட வேண்டும்.

நம்முடைய கற்பனைகளுக்கு என்ன ஆதாரம்? அவை ஏன் வெறும் பிரம்மையாக இருக்கக் கூடாது? நம்முடைய சந்தேகங்கள் இதுவரை எத்தனை முறை ஊர்ஜிதமாகியிருக்கின்றன? இதுவரை பெரும்பான்மையான விடயங்களில் தப்புக்கணக்குத்தானே போட்டிருக்கிறோம் ஆகிய கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

கோளாறு மனத்தினுள்ளே இருக்கிறதே தவிர வெளியில் அல்ல என்பதை உணர வேண்டும்.

திட்டமிட்ட செயல் என்று எண்ண இடமளித்து அதன் மூலம் மற்றவர் மனம் புண்படாத வரையில் திடீர்ச் சோதனைகளை நடத்தியும் தெளிவு பெறலாம்.

ஆனால் உண்மையை நாம் உணர நேரிட்டால் அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய மனநிலையை நாம் ஏற்படுத்திக் கொண்டு விட வேண்டும்.

சந்தேகம் என்னும் ஒழுகல் பானையைத் தலைப்பாரமாய் தூக்கிச் சுமப்பது நல்லதல்ல. அதை உடனுக்குடன் உடைத்து விடுவதிலேயே நாம் குறியாக இருக்க வேண்டும்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## புத்தியுள்ள பெண் ஆடு

ஒரு சமயம் ஒரு அடர்ந்த காட்டு குகையின் அருகே சில ஆடுகள் வசித்து வந்தன. தினமும் அவை குகையின் அருகே வளர்ந்திருந்த பசுமையான புல்லை மேய்ந்தன.

நன்கு பசுமையாக வளர்ந்திருந்த புற்கள் ஆண்டு முழுவதும் ஆடுகளுக்கு அவை இரையாக உபயோகமானது. ஆடுகளும் அவைகளை தின்று கொழுத்து வளர்ந்திருந்தன.

ஒருநாள் ஒரு நரியும், அதன்மனைவியும்ஆட்டு மந்தை அருகே சென்று பார்த்தன. பார்த்த மாத்திரத்தில் நரிகளுக்கு ஆனந்தம் உண்டானது. ஆடுகளோ மேய்வதில் கருத்தாய் இருந்தன.

நரியோ பாய்ந்து ஆடு ஒன்றை கவ்விட துடித்தது. ஆனால் மனைவி நரி அதை தடுத்து நிறுத்தியது.

**பெண் நரி:** அதிகம் ஆவல் காட்டாதே நாம் மந்தை அருகே இருப்பதை அவை அறிந்தால் அவை ஓடி விடும் ஏதாவது ஆடு நம் அருகே வரும் வரை காத்திருப்போம். பிறகு ஒவ்வொன்றாய் கொள்வது.. நமக்கு எளிது ஒரு நாளைக்கு ஒன்று. உடனே ஆண் நரி...

**ஆண் நரி:** ஆஹா இது நல்ல யோசனை... அப்படியே செய்யலாம் என்றது. சிறிது நேரம் ஆனதும், அந்த வழியே வந்தது ஒரு ஆடு. உடனே அதை தாக்கியது நரிகள். பாவம் அந்த ஆடு கத்தவும் முடியாமல், மற்றவர்களையும் எச்சரிக்கை செய்ய முடியாமல் இறந்து போனது.



அன்று நரிக்கும், அதன் மனைவிக்கும் நல்ல விருந்து கிடைத்தது. அது முதலாகவே நரியும் அதன் துணையும், மந்தைக்கு வருவதும் ஆடுகளை கொன்று தின்பதுமாக இருந்தது. அவர்களின் வாழ்வு மிக வசதியானதாய் இருந்தது.

மெதுவாக நாட்கள் நகர்ந்தன. ஆடுகளின் எண்ணிக்கை குறைந்து வந்தது. இறுதியில் ஒரு பெண் ஆடு மட்டும் உயிரோடு இருந்தது. புத்திசாலியான அந்த பெண் ஆடு தன்னோடு இருந்த அத்தனை ஆடுகளும் நரிகளால் கொல்லப்பட்டு விட்டதை அறிந்திருந்தது.

மிகவும் எச்சரிக்கை உணர்வுடன் குகையை விட்டு வெளியே செல்லாமல் இருந்தது. மேய்ச்சலுக்கு செல்லவும் இல்லை. ஆனால் குகை அருகில் வளர்ந்திருந்த புற்களை மட்டும் மேய்ந்து தன் பசியை போக்கிக் கொண்டது.

இதற்கிடையில் ஆடுகளை தின்று வந்த நரிகள் இனிமேல் ஆடுகள் ஏதும் இல்லை என்ற தீர்மானத்திற்கு வந்தது. வேறிடத்திற்கு சென்று தங்களுக்கான உணவை தேட முடிவு செய்தன. அப்படி முடிவெடுத்து செல்லும்வழியில் குகையருகே பெண் ஆடு மேய்வதைக் கண்டு பதுங்கின.

பெண் ஆடும் நரிகளைக்கண்டதும் குகைக்குள் ஓடிப் பதுங்கிக் கொண்டது.

பல நாட்கள் வெளிவராமல் உள்ளேயே வளர்ந்த புற்களைத் தின்று பசியாறியது.

(தொடரும்)

# மகாபாரதம்

**301**



உனது பொருட்களை பிறர் கவர்ந்து கொள்ள நீ வாழ்க்கைக்கு வேறொருவர் தயவை எதிர்பார்த்திருக்க வேண்டும். அதனால் நீ இளைத்திருக்கலாம்.

நீ தகாதவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொண்டபின் அவர்களை விட முடியாமல் வருந்தியிருக்க வேண்டும். அதனால் நீ இளைத்திருக்கலாம்.

உன்னிடம் கல்வியில்லை செல்வமில்லை. கொடை இல்லை.. அப்படியிருந்தும் பெரிய புகழுக்கு நீ ஏங்கி இருக்க வேண்டும். அதனால் நீ இளைத்திருக்கலாம்.

நெடுநாள் எதிர்பார்த்த ஒன்று பிறரால் அபகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் நீ இளைத்திருக்கலாம்.

பாவிகள் நலமுடன் வாழ நல்லவர்கள் கஷ்டப்படுவது கண்டு நீ தெய்வத்தை பழித்திருக்க வேண்டும். அதனால் நீ இளைத்திருக்கலாம்.

அந்தணனின் சொல் வன்மையைக் கண்டு வியப்படைந்த அரக்கன் அவனது இனிய சொற்களைப் பலவாறு பாராட்டி அவனை விடுதலை செய்தான்.

ஆதலால் தருமா! இச் சொல்லால் ஆகாதது இல்லை என உணர்ந்து கொள்" என்றார் பீஷ்மர்.

**தவத்தைவிடச் சிறந்தது**

தருமர், பீஷ்மரிடம், "தவத்தைவிடச் சிறந்தது உண்டா?"எனவினவ, பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

"தவத்தைவிட மேலான எது உபவாசம். இதனினும் சிறந்ததாக எதுவும் இல்லை. இது தொடர்பாகப் பிரம்ம தேவனுக்கும், பகீரதனுக்கும் நடைபெற்ற உரையாடலை நெடுங்காலமாக கூறி வருகின்றனர். அதைக் கூறுகிறேன்.

ஒரு சமயம் பகீரதன் தேவலோகத்தையும், கோலோகத்தையும் கடந்து ரிஷிலோகத்தை அடைந்தான்.

அப்போது பிரம்ம தேவன் பகீரதனைப் பார்த்து, "அடையமுடியா இந்த ரிஷிலோகத்திற்கு நீ எப்படி வந்தாய்? தேவர்களாயினும், கந்தர்வர்களாயினும், மனிதராயினும் தவம் செய்து தான்இங்கு வர இயலும்.

அப்படியிருக்க நீ வந்தது எவ் வாறு?" என வினவினார்.

பகீரதன் அதற்கு "பிரம்ம தேவரே! ஒரு இலட்சம் பேருக்கு அன்னம் அளித்தேன். ஆனால் அதன் பலனாக இங்கு நான் வரவில்லை.

ஏகாத்ரம் என்னும் யாகங்கள் பத்தும் பஞ்சராத்ரம் என்னும் யாகங்கள் பத்தும் ஏகாதசராத்ர யாகங்கள் பதினொன்றும் ஜோதிஷ்டோமம் என்னும் யோகங்கள் நூறும் செய்தேன். அவற்றின் பயனாலும் இங்கு நான் வர வில்லை.

கங்கைக் கரையில் நூறு வருடம் தவம் செய்தேன். அங்கே ஆயிரம் கோவேறு கழுதைகளையும், கன்னியரையும் தானம் செய்தேன். அவற்றின் பயனாலும் இங்கு நான் வரவில்லை.

புஷ்கரஷேத்திரத்தில் நூறாயிரம் குதிரைகளையும் இரண்டு இலட்சம் பசுக்களையும் அந்தணர்க்கு வழங்கினேன். அவற்றின் பயனாலும் நான் இங்கு வரவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செய்கின்றேன்; நான் நடத்துகின்றேன்; நான் இதற்குத் தலைவன்; நானின்றி இவைகள் நடைபெற மாட்டா என்று எண்ணுகின்ற "நான்" தொலைய வேண்டும். – சிந்தனைத் துளிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையின் அரசியலில் விபூடணப் பண்பாடு

சீதையை மீட்க, இலங்கை வந்த இராம பிரான் இலங்கைவேந்தன் இராவண்னுடன் கடும் போர் புரிந்தார். போரின் போது இரு தரப்பிலும் கணிசமான இழப்புகள் ஏற்பட்டன.

அதிலும் குறிப்பாக இராவணனின் அருமை மைந்தன் இந்திரஜித்து, அருமைத் தம்பி கும்பகர்ணன் ஆகியோர் உயிரிழந்து போயினர். இந்த இழப்பு வாரணம் பொருதமார்பினனைக் கடுமையாக வாட்டியது.

நான் இறந்த பின்பேனும் கற்பின் செல்வியை விட்டுடு! என்பது அண்ணன் இராவணனிடம் தம்பி கும்பகர்ணன் முன்வைத்த கோரிக்கை. இக்கோரிக்கை சுயநலம் சார்ந்த தன்று.

மாறாக, அண்ணன் இராவணனைக் காப்பாற்றுவதும் அவன் சேனையைப் பாதுகாப்பதும் நோக்கமாகும்.

இதற்கு மேலாக, மனைவியை இழந்திருக்கக்கூடிய இராமனின் துயரை ஆற்றுப்படுத்துகின்ற உயரிய நேயமும் கும்பகர்ணனின் கோரிக்கைக்குள் அடங்கி இருந்தது.

எனினும் போர் என்று வந்துவிட்டால், முடிவு கண்டாக வேண்டும் என்ற ஒரே நோக்கில் இராமனுடன் போரிட்டு இராவணன் உயிரிழந்து போனான். இஃது இராமாயணம் கூறும் கதை.

இவை ஒருபுறமிருக்க, இலங்கை மீது போர் தொடுத்த இராமபிரான் தன் ஆட்சியை இலங்கையில் ஏற்படுத்த விரும்பவில்லை. அதற்குரிய காரணத்தைக் கூறுவது இவ்விடத்தில் பொருத்தமற்றது என்பதால், அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால், இராவணன் உயிரிழந்த பின்பு இலங்கையின் ஆட்சியை விபூடணனிடம் கையளித்தார் இராமர். அதாவது வெளிநாட்டவர் ஒருவர் இலங்கை மீது போர் தொடுத்து வெற்றி கண்டாராயினும் இலங்கையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்கம் அவரிடம் இருந்திருக்கவில்லை.

தன் பக்கம் வந்து சேர்ந்த விபூடணனிடம் இலங்கையின் ஆட்சியை இராமர் ஒப்படைத்தார். இந்த அரசியல் பண்பாடு இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆம், இப்போதெல்லாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி மீது வெளிநாடுகள் தமது வெறுப்பை வெளிக்காட்டத் தலைப்பட்டுள்ளன.

இலங்கையின் இன்றைய கடும் பொருளாதார மந்தத்திற்கு வெளிநாடுகளும் காரணமாக இருக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை. இந்த நிலைமை ஆட்சி மாற்றம் பற்றிய சிந்தனையின் வெளிப்படை எனக் கூறுவதில் தவறில்லை.

ஆம், தம்மோடு இசையக்கூடிய – ஜனநாயகப் பண்பாட்டை மீளக் கொண்டுவரக்கூடிய ஒருவரை இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதே வெளிநாடுகளின் இலக்காக உள்ளது.

இதை நாம் கூறும் போது அது யாராக இருக்குமென்று நீங்கள் கேட்டால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதே அதற்கான பதிலாகும்.

ஆம், மீண்டும் மைத்திரி மூலமே ஆட்சி மாற்றம் சாத்தியமாகும் என்பது வெளிநாடுகளின் கணிப்பு. அந்தக் கணிப்பை மைத்திரியும் மறுக்கவில்லை என்பதும் தெரிகிறது. எதற்கும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# அரசு தனது செல்வாக்கை இழந்த நிலையில் தேர்தல்களை பிற்போடுகின்றது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்குள்ளேயே தமது செல்வாக்கை முற்றுமுழுதாக இழந்து இருக்கின்ற ஒரு நிலையிலேதான் இன்று தேர்தல்கள் அனைத்தையும் பிற்போடுகின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று காரைநகர் சலோம் தேவாலயத்தில் மக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எந்த ஒரு நாடும் ஜனநாயகத்தை மதிக்கின்ற நாடாக இருந்தால் அந்த நாட்டினுடைய தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்தினுள் நடைபெற வேண்டும்.

வழமையாக நான்கு வருடம் அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அந்த நாட்டினுடைய கட்டமைப்புக்கு அமைய தேர்தல்கள் மக்களுடைய ஆணையைப் பெற்று நடத்தப்பட வேண்டும் என்பதுதான் முறை.

ஆனால் எங்களது நாட்டில் தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப் போடுவது என்பது ஒரு சாதாரண விடயமாக இன்று இருக்கிறது.

மக்களது ஆணையை பெற்றவர்கள் மக்கள் மத்தியிலே தங்களது நம்பிக்கையை தக்க வைக்க முடியாத நிலையிலேயே அடுத்த தேர்தல் வருவதற்கிடையே உள்ள மற்ற தேர்தலை நடத்தாமல் பிற்போட்டு மக்களையும் ஏமாற்றிக் கொண்டு போவதுதான் வழமை.

அதுபோல இன்று இந்த அரசாங்கம் 2/3 பெரும்பான்மை தங்களுக்கு இருக்கின்றது என கொக்கரித்துக் கொண்டு இருந்து உள்ளூராட்சி தேர்தல்களில் முகங்கொடுக்க முடியாத அளவுக்கு அல்லது மாகாண சபை முறைமைக்கு முகங்கொடுக்க முடியாத நிலையிலே, அனைத்து தேர்தல்களையும் பிற்போடுகின்ற வகையிலேதான் அவர்களது செயற்பாடுகள் அனைத்தும் உள்ளது என்றார். (ம-104)

# எமது புதிய யுகம் நோக்கிய பயணத்திற்கு ஆதரவளியுங்கள்

## யாழில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

புதிய யுகம் நோக்கி பயணிக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு வருகின்றார்.

இந்த நிலையில் நேற்று கரவெட்டியில் கட்சியின் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளர் அகிலதாசின் ஏற்பாட்டில் தைப்பொங்கலுக்கு பொங்கல் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியானது எதிர்க்கட்சியாக இருந்து கொண்டும் அரசியலில் மட்டும் கவனம் செலுத்தாது மக்களின் சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களிலும் அவதானம் செலுத்தி வருகின்றது.

தற்போது மக்கள் அரசாங்கத்தை வெறுக்கின்றார்கள். ஏன் இவர்களுக்கு வாக்களித்தோம் என்று எண்ணும் அளவிற்கு நிலைமை காணப்படுகின்றது.

ஆனால் நாங்கள் எல்லாவற்றையும் உற்று நோக்கி செயற்படுகின்றோம். எனவே அனைத்து மக்களும் எமது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் புதிய யுகத்தை நோக்கி பயணிக்க முடியும் என்றார். (ம-18,33,60,104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் அரசன் அரிசி ஆலை, வைரவப் புளியங்குளம், ஆதி விநாயகர் கோவிலடி, கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகா றம்பைக்குளம், முகத்தான்குளம் 1 ஆவது பண்ணை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### வாடகை வீட்டில் வசிப்பவர்களுக்கு

# நிரந்தர வீடு வழங்கும் திட்டத்திற்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கையில் வீடு அல்லது காணி இல்லாமல் வாடகை அடிப்படையில் வாழும் குடும்பத்திற்கு நிரந்தர வீடு ஒன்றை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


அதற்கமைய நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு மலிவு விலையில் வீட்டு திட்டம் ஒன்றை ஆரம்பிக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு முற்கொடுப்பனவாக 500,000 ரூபாய் செலுத்தக்கூடிய வசதி இருக்க வேண்டும்.

வீட்டின் பெறுமதிக் கமைய மேலதிக பணத்தை வருடத்திற்கு தவணை முறையில் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்

## குருவும் சீடரும்



'ஹோமா என்னும் பறவையைப் பற்றி வேதங்கள் பேசுகின்றன. இந்தப் பறவை வானத்தில் மிக உயரத்தில் வாழ்கிறது. வானத்திலேயே முட்டை இடுகிறது. அந்த முட்டை அதிக உயரத்திலிருந்து விழுவதால் கீழே வருவதற்குப் பல நாட்களாகும். அப்படி வந்து கொண்டிருக்கும்போதே முட்டை பொரிந்து குஞ்சு வெளிவரும். குஞ்சும் கீழ்நோக்கி வரத் தொடங்கும். அப்போது அதன் கண்கள் திறக்கும், இறகுகள் முளைக்கும். பார்வை வந்ததும், தான் கீழ்நோக்கிச் செல்வதையும் தரையில் வீழ்ந்தால் அடிபட்டுச் சின்னாபின்னமாகி விடுவோம் என்பதையும் உணரும். உடனே இறகுகளை அடித்துக்கொண்டு, தாய்ப் பறவையை நோக்கி வேகமாக மேலே பறந்து சென்றுவிடும்.' (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

51

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



"தமிழில் துணையெழுத்து மாற்றம் செய்தது ஈ.வெ.ரா தான் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானவை" - 22 வயதுடைய இளம் தமிழ்மொழிப் பற்றாளரின் ஆதங்கம். வலம்புரியில் நான் எழுதி வரும் கட்டுரையில் "தமிழில் துணையெழுத்து மாற்றம் செய்தது ஈ.வெ.ரா தான் என்று கூறுவது தவறு என்று 22 வயதுடைய இளம் தமிழ்மொழிப் பற்றாளர் ஆதங்கப்பட்டு எனக்கு எழுதியிருந்தார். அதனை உங்களுக்குத் தருகிறேன். "இன்றைய வலம்புரி நாளிதழில் ஐயா கலாநிதி க.தவலிங்கம் எழுதிய கட்டுரையை பார்க்கலானேன். அதிலும் குறிப்பாக நடுவண் விழிப்பாக இடம்பெற்ற மொழியியல் பற்றிய ஒரு விளக்கப்படமே முதலில் பார்க்கலானேன். அதில் ஈ.வெ.ராதான் தமிழில் "துணையெழுத்து" மாற்றம் செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது முற்றிலும் தவறு. ஏற்கனவே 1915 இல் வ.உ.சி "ஞானபனு" என்ற ஏட்டில் "தமிழ் எழுத்துக்கள்" என்ற தலைப்பில் இதுபற்றி முன்மொழிந்திருந்தார். அதனைத் தொடர்ந்து 1930 களில் வெளிவந்த "குமரன்" இதழில் அதன் ஆசிரியரான குமரப்பா இவ்வெழுத்து வடிவத்தையே பயன்படுத்தி வந்திருக்கிறார். எனவே ஈ.வெ.ராதான் இவ்வெழுத்து வடிவத்தை அறிமுகப்படுத்தி வைத்தார் அல்லது முதன் முதலில் பயன்படுத்தி வந்தார் என்பதெல்லாம் உண்மைக்குப் புறம்பானவை."

### இதுபற்றிய எனது கருத்து

"உலகத்து மக்கள் எத்தனையோ எண்ணுகிறார்கள், சொல்லுகிறார்கள், செய்கிறார்கள். அதில் பெரும் பகுதி கவனிக்கப்படாமல் போகின்றது. கவனித்தவற்றுள் ஒரு பகுதி தான் நினைவில் இருக்கிறது. நினைவில் இருப்பவற்றுள் ஒரு பகுதிதான் பதித்து வைக்கப்படுகிறது.

பதித்து வைக்கப்பட்டவையுள் ஒரு பகுதிதான் எஞ்சியிருக்கிறது. எஞ்சியுள்ளவைகளில் வரலாற்று ஆசியரியர்களுக்குத் தெரிந்தவை ஒரு பகுதிதான். அதிலும் ஒரு பகுதி தான் நம்பகமாக உணரப்படுகிறது. உணரப்பட்டவைகளில் ஒரு பகுதி தான் முறையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதாவது நமக்கு கிடைத்துள்ள தகவல்கள் மிகச் சுருக்கமானவை" - இவ்வாறு அறிவியல் மேதை லூயி கோட்சாக் கூறியிருந்தார்.

### தமிழில் துணை எழுத்துச் சீர்திருத்த வரலாறு

✠ 1915 ஆம் ஆண்டில் சுப்பிரமணிய சிவா நடத்திய 'ஞான பாநு' ஏட்டில், 'தமிழ் எழுத்துகள்' என்ற தலைப்பில் வ.உ.சிதம்பரனார் எழுதிய கட்டுரை ஒன்றில், இக் காலத்திலே (ஓணான் சுருட்டிய வால் போன்று உள்ள எழுத்துகள்) எழுதப்படும் எழுத்துகளுக்கு மாற்றாக றா, றோ, னா, னோ என்று எழுத வேண்டும் என்று சிலர் கருதுவதாக குறிப்பிட்டிருந்தார்.

✠ 1930 காரைக்குடியில் இருந்து வெளிவந்த குமரன் இதழில் அதன் ஆசிரியர் முருகப்பா ணா, றா, னா, ணை, ளை, னை என்ற வரிவடிவங்களைப் பயன்படுத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டு வாசகர் கருத்தை வரவேற்றார்.

✠ 1933 டிசெம்பர் 23, 24 நாட்களில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த தமிழன் பர்மா நாட்டில் 15 ஆவது தீர்மானமாக எழுத்துச் சீர்திருத்தத் தீர்மானம் நிறைவேறியது.

✠ 1933 இல் தமிழ்வரிவடிவ ஆராய்ச்சி என்ற தலைப்பில் சிங்கப்பூர்த் தமிழ் அறிஞர் சு.சி.சுப்பையா "சிங்கப்பூர் முன்னேற்றம்" இதழில் தொடர் கட்டுரை எழுதினார்.

✠ 1935 குடியரசு இதழில் பெரியார் எழுத்து என்று குமரன் இதழ் ஆசிரியர் முருகப்பா 1930 இல் பயன்படுத் திய மாற்றங்களையும் ஏற்கனவே புழக்கத்தில் இருந்த அய், அவ் ஒலி மாற்றங்களையும் சேர்த்து திருந் திய வரிவடிவத்தைப் புகுத்தித் தொடந்து குடியரசிலும், விடுதலையிலும் பயன்படுத்தினர். (அய், அவ், ணா, றா, னா, ணை, னை, லை, ளை, ணொ, ணோ, னொ, னோ, றொ, றோ).

✠ 1941 ஜனவரி 18, 19 நாட்களில் மதுரையில் நடைபெற்ற "தமிழ் இலக்கிய மாநாட்டில்" எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

✠ 1948 பெப்ரவரி 14, 15 நாட்களில் சென்னையில் நடைபெற்ற "அகிலத் தமிழர் மாநாட்டில்" எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எழுத்துச் சீர்திருத்தக் குழுவும் அமைக்கப்பட்டது.

✠ 1950 இல் தி.சு.அவிநாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்த பொழுது எழுத்துச் சீர்திருத்தக் குழுவை அமைத்தார்.

✠ உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் சார்பில் நடந்த ஒவ்வொரு மாநாட்டிலும் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றன.

✠ 1975 பெப்ரவரித் திங்களில் தமிழகப் புலவர் குழு உயிர்மெய் உகர ஊகாரம் உட்பட எழுத்துச் சீர்திருத்த ஆய்வுத் தீர்மானம் நிறைவேற்றியது.

✠ 1977 ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அறிஞர் கருத்தறிந்து எல்லோரும் ஏற்கும் வகையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்வதாக உறுதியளித்தது.

✠ 1978-79 இல் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழ் நாடு அரசு, முதற்கட்டமாகப் பெரியார் 1935 முதல் பயன்படுத்தி வந்த வரிவடிவத்தில் அய், அவ் தவிர மற்றவற்றைச் செயற்படுத்தியது.

✠ இதன்பின் இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இச் சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது.

குறிப்பு - பெரியார் தனது ஏடுகளில் தமிழில் உள்ள சில எழுத்துகளை மாற்றம் செய்து வெளியிட்டது மட்டுந்தான் என்றும் அவர் வந்த பிறகு தான் தமிழ்நாட்டில் எழுத்து சீர்திருத்த சிந்தனை பிறந்தது என்று கூறுவது தவறு என்று கூறுவோரும் உள்ளனர்.

### தமிழ் எண்கள்

தமிழ் எழுத்துகளும் தமிழ் எண்களும் ஒன்றல்ல. தமிழ் எண்கள் என்பது தமிழில் பயன்படுத்தப்படும் எண்களைக் குறிக்கும். இவை கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணப்படும் கிரந்த எழுத்து முறை ஆகும். கிரந்தம் என்பது வடமொழியினை எழுத தென்னிந் தியாவில் பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு எழுத்து முறையென்று முன்னர் பார்த்தோம்.

இவ்வெண் வடிவங்கள் பிற தமிழ் எழுத்துக்களின் வடிவங்களை மிகவும் ஒத்துக்காணப்படும். தமிழ் எண்களும் கிரந்த எண்களும் ஒரே எண் வடிவைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் கிரந்த எண்களைப் போல் தமிழில் சுழியம் (பூச்சியம்) ஆரம்பத்தில் இருக்கவில்லை. தமிழ் எண்களின் வளர்ச்சியை படம் ஐ காட்டுகிறது.

**தமிழ் எழுத்துகளும் தமிழ் எண்களும் ஒன்றல்ல. தமிழ் எண்கள் என்பது தமிழில் பயன் படுத்தப்படும் எண்களைக் குறிக்கும். ஒரு மொழியின் எல்லா எழுத்துகளுக்கும் குறியீடுகளுக்கும், வரிவடிவ அமைப்பில் ஒரு சீர்மை இருக்கும். எனவே எண்களும் சில வேளைகளில் எழுத்துகளைப் போலத் தோற் றம் அளிக்கும். அதுபோலவே தமிழில் உள்ள சில எண்களும் எழுத்துகள் போலவே இருக்கின்றன.**

தமிழ் எண்களின் வளர்ச்சி படம் ஐ




தமிழ் எண்ணும் இலக்கமும் கல்வெட்டுக்களில் [illegible] வண்ணம் ( நன்றி- சா.கணேசன்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியவர்...

யவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கைதடி பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் உள்ள கடையில் பணியாற்றும் கெற்பேலி மேற்கு கெற்பேலிப் பகுதியைச் சேர்ந்த 68வயதான நாகராசா என்ற முதியவரே கைதடியில் உள்ள மண்டபம் ஒன்றின் வெளிப்பகுதியில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-30)

## 15 பேர்...

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,149 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மாதகலில்...

தொழிலுக்குச் சென்ற நிலையில் மாதகல் கடற்பரப்பிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் படகு கவிழ்ந்து காணப்பட்டுள்ளது.

அதனை அடுத்து உள்ளூர் மீனவர்களினால் படகு மீட்கப்பட்டதுடன் உயிரிழந்த மீனவரின் சடலமும் மீட்கப்பட்டது.

மீனவரின் படகு மீது கடற்படையினரின் படகு மோதியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் மீனவர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

எனினும், கடற்படையினர் அதனை மறுத்துள்ளதுடன் இந்திய மீனவர்களின் றோலர் படகு மோதி விபத்து இடம்பெற்றிருக்கலாம் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ம-18,33)

## ஜனாதிபதி...

நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதியின் சிம்மாசன உரை தொடர்பில் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## எதிர்வரும் 10...

ஊடக சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்துக்கு அமைய மின்துண்டிப்பு ஏற்படக்கூடும்.

இதன் காரணமாகவே முன்னறிவிக்கையாக பொதுமக்களை அறிவுறுத்த மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார். (ம)

## யாழில் 10 தேர்...

டனான கலந்துரையாடலிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அனைவரும் அறிவீர்கள்.

நாட்டில் படித்த இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த தொழில் வாய்ப்பு இல்லாத நிலையில் சிறந்த திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதற்குரிய தலைமைத்துவமும் இல்லை.

யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகள், பத்து தேர்தல் தொகுதிகள் உள்ள நிலையில் இவை அனைத்திற்கும் சென்றவன் என்ற அடிப்படையில் மக்கள் பிரச்சினைகள் பற்றி நன்கு தெரியும்.

குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு காங்கேசன்துறை மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

நாட்டில் வாழும் மக்கள் மத்தியில் பல்வேறு தேவைப்பாடுகள் மற்றும் தீர்க்க வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளதை நான் அறிவேன்.

அதன் காரணமாகவே இயலுமான வரை மக்கள் மத்தியில் சென்று அவர்களின் குறைகளை கேட்டு வருகிறேன்.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று வந்திருக்கிறேன். காங்கேசன்துறையில் வைத்து என்னால் உறுதிமொழியை வழங்கமுடியும். யாழ். மாவட்டத்தில் உள்ள 10 தேர்தல் தொகுதிகளிலும் 10 தொழிற்சாலைகளை எனது ஆட்சியில் நிறுவுவேன்.

நாட்டில் தற்போது மக்கள் நிம்மதியாக வாழமுடியவில்லை. ஆட்சியாளர்கள் தொடர்பில் மக்கள் விரக்தியின் விளிம்பில் சென்றிருக்கிறார்கள்.

ஆகவே மக்களைப் புறந்தள்ளி நடக்கும் அரசாங்கத்துக்கு எதிராக மக்களுடன் மக்களுக்காக பயணிக்கும் அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-60,104)

## இந்திய...

இந்த ஆவணம் கையளிக்கப்படுவதாக இருந்தபோதிலும் இந்திய உயர்ஸ்தானிகர் அவசரப் பயணமாக டெல்லி சென்றிருப்பதால் அவர் திரும்பி வந்தவுடன் குறித்த ஆவணத்தை கையளிக்க தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 18ஆம் திகதி இக்கடிதம் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக நேற்று காலை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா கைச்சாத்திட்டதோடு அனைத்து தலைவர்களும் இந்தியப் பிரதமருக்கான ஆவணத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கை முற்றுப்பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-250)

## யாழில் பெண் ...

கஜா சாயன் என்ற சிசுவே உயிரிழந்துள்ளது. நள்ளிரவு பால் குடித்துவிட்டு நித்திரையில் ஆழ்ந்திருந்த சிசுவுக்கு அதிகாலை 3.30 மணியளவில் மூக்கால் இரத்தம் வந்துள்ளது. உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது ஏற்கனவே சிசு இறந்து விட்டதாக கூறப்பட்டுள்ளது.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டதுடன் பால் புரைக்கேறியே இறந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-33)

## வெடி...

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

69 இலட்சம் மக்களும் பாரிய எதிர்பார்ப்புடனே அரசாங்கத்துக்கு வாக்களித்தனர். என்றாலும் தற்போது அவர்களின் எதிர்பார்ப்பு முற்றாக வீணாகி இருக்கின்றது. மக்களுக்கு அன்றாடம் வாழ்க்கை செலவை தாங்கிக்கொள்ள முடியாத வகையில் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இருந்து வருகின்றது. பணம் இருந்தாலும் பொருட்களை பெற்றுக்கொள்ள வரிசையில் இருக்க வேண்டி நிலை. இந்த நிலைமையை மக்கள் அரசாங்கத்திடம் எதிர்பார்க்கவில்லை. அரசாங்கத்தின் மோசமான தீர்மானங்களால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது நடுத்தர மக்களாகும்.

அத்துடன் அரசாங்கத்தின் இரசாயன உரம் தொடர்பான உடனடி தீர்மானத்தால் அனைத்து விவசாய உற்பத்திகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. இந்த பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணாமல் அரசாங்கம் நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துவருகின்றது.

அடுத்துவரும் 3வருடங்களுக்கு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்த வேலைத்திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. மாறாக பணம் அச்சிடும் நடவடிக்கையையே மேற்கொண்டு வருகின்றது. அதனால் எதிர்காலத்தில் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும் அபாயமே இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். (ம)

## இலங்கைக்கு...

அரச தலைவர் விடுத்த கோரிக்கை இதற்கு காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த கோரிக்கையானது, இலங்கை கடனை திரும்ப செலுத்த முடியாத நாடாக மாறியுள்ளது என சர்வதேச நிதிச் சந்தைக்கு வழங்கிய மிக ஆபத்தான சமிக்ஞையாகும் எனவும் சம்பிக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ம)




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு




இலங்கை வங்கியில்
கடந்த 28 ஆண்டுகளாக சிறப்புற
கடமையாற்றி 11.01.2022 அன்று
ஓய்வுபெற்றுச் சென்ற எமது
கிளையின் சக உத்தியோகத்தர்

**திருமதி வாசுகி ஜோதீஸ்வரன்**

அவர்களின் ஓய்வுக் காலம்
சிறப்புற அமைய பாராட்டி அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பிரதான முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி, யாழ். அதிமேற்தரக் கிளை,
யாழ்ப்பாணம். (9605)


## +623

நாட்டில் நேற்று மேலும் 623 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 593,072 ஆக அதிகரித்துள்ளது. (ம)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9617)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9621)

**வீட்டுப் பணியாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வாரத்தில் 3 நாட்கள் வந்து வேலை செய்யக்கூடிய (பெண்) வீட்டு உதவியாளர் தேவை. (40 வயதிற்கு மேல் விரும்பத்தக்கது) (9610)

077 869 5354
076 897 2637

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3491)

0768226240 DHL

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 90 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

[மேட்டுநிலம், நிலப்பரப்பு]
நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்
ஒரு பரப்பின் விலை 4 இலட்சம் (9496)

தொடர்பு
077 911 6983, 077 658 5999
077 288 0152, 077 623 4204

**காணி தேவை**

ஒருங்கிணைந்த பண்ணை செய்வதற்கு 10 ஏக்கருக்கு மேல் தோட்டக்காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. தேவையான இடங்கள் கிளிநொச்சியில்..

- கிருஸ்ணபுரம்
- செல்வாநகர்
- மல்லாவி
- மலையாளபுரம்
- வட்டக்கச்சி
- சாந்தபுரம்
- விசுவமடு

குறிப்பாக குளங்களை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது.
(தரகர் தேவையில்லை) (9613)

077 052 3594

**DMI** ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் - யாழ்ப்பாணம்

A/L - 2021 மாணவர்களுக்கான ...
**புவியியல் கருத்தரங்கு**
ஜனவரி – 17, 21, 22, 24 ஆம் திகதிகளில்
ஆசிரியர் - N.BABU
ஆரம்பம் - 17.01.2022
திங்கள் காலை - 8.00 மணி
புதிய, வெளிமாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். (C-3500)
077 936 5087


# மரண அறிவித்தல்



திருமதி

## தேவதாசன் புஸ்பகலாதேவி

(ராணி ரீச்சர் – சாவகச்சேரி பிரதேச சபை ஐங்கரன் முன்பள்ளியின் ஓய்வுபெற்ற முன்பள்ளி ஆசிரியை)

பிறப்பு : 25.09.1957 இறப்பு : 11.01.2022

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவதாசன் புஸ்பகலாதேவி (ராணி ரீச்சர்) அவர்கள் நேற்று (11.01.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நல்லதம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தேவதாசனின் அன்பு மனைவியும் சத்தியகௌரியின் பாசமிகு தாயாரும் நிதர்சனின் (பெல்ஜியம்) பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :-
கு. நிதர்சன்
(மருமகன்)
(C-3508)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.